
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
06.09.2024 வெள்ளிக்கிழமை
இதழ் : 250
பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை



ரணிலால் இயலும்

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
Ranil Wickremesinghe

வாய்ச்சொல் வீரர்களை நம்பி தடம் மாறும் தருணம் இதுவல்ல
சிறுபான்மையினர் பற்றிச் சிந்திக்கும் ஒரே தலைவர்

உங்களோடு உரையாட வருகிறார்
ஜனாதிபதி ரணில்
2024.09.07

மாலை 4 மணிக்கு
சங்கிலியன் பூங்கா,
யாழ்ப்பாணம்

மாலை 5 மணிக்கு
உடுப்பிட்டி,
யாழ்ப்பாணம்

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விதிமுறை மீறல் 2,227 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, செப். 06

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 2,227 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 846 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,308 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 62 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

(ஐ)

# போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, செப். 06

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான "தெமட்ட கொடை சமிந்த"வின் மகனான மலீஷ எண்பவருடன் இணைந்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்று கூறப்படும் இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பை சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். கைதானவரிடமிருந்து 13 கிராம் 250 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச சொத்துகள் துஷ்பிரயோகம்

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

கொழும்பு, செப். 06

ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்தில் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்து டிரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல் கடும் கரிசனை வெளி யிட்டுள்ளது.

பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்து 500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக டிரான்ஸ்பரன்சி இன்ரர்நஷனல் நிறைவேற்று பணிப்பாளர் நதிசானி பெரேரா தெரிவித்தார்.

300 முறைப்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படு வது குறித்து பொதுமக்கள் விரக்தியடைந்துள்ளனர். அரசியல் நோக்கங்களுக்காக பொதுச் சொத்துக்களை பயன்படுத்துபவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவது குறித்து மக்கள் ஆர்வமாக உள்ளனர் என அவர் கூறினார்.

(அ)

# அரவிந்த குமார் அபகரித்த இல்லம் தோட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது

கொழும்பு, செப். 06

எந்த விதமான அனுமதியுமின்றி கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் சுமார் 30 வருடங்களாக தனது பாதுகாப்பில் வைத்திருந்த ஹற்றன் தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான லிந்துலை ஹென்ஃபோல்ட் தோட்டத்தில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லம் நீதிமன்ற பதிவாளர், பிஸ்கல் அதிகாரிகளால் தோட்ட நிர்வாகத்திடம் நேற்று வியாழக்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு தோட்டத்தின் பிரதம லிகிதராக அரவிந்த குமார் பணியாற்றிய போது, தோட்ட நிர்வாகம், இந்த இல்லத்தை அரவிந்த குமாருக்கு உத்தியோகபூர்வ இல்லமாக பயன்படுத்த வழங்கியது. அரவிந்தகுமார் தோட்டத்தை விட்டு வெளியேறிய பின்னர், அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை மீண்டும் தோட்டத்துக்கு ஒப்படைக்காது அதிலேயே வசித்து வந்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தோட்ட நிர்வாகம் நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது.

நீண்டகாலமாக நிலுவையில் இருந்த வழக்கில் உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுமாறு அரவிந்த குமாருக்கு எதிராக தீர்ப்பளிக்கப்பட்டது. அந்த தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் அரவிந்த குமார் மேல்முறையீடு செய்திருந்தார்.

எனினும், நுவரெலியா நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது.

இதைத் தொடர்ந்து நுவரெலியா நீதிவான் நீதிமன்றின் தலையீட்டில் நேற்றைய தினம் குறித்த வீடு தோட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

(ஐ)

# 50 இலட்சம் புதிய கடவுச்சீட்டுகள் கொள்வனவு செய்ய நடவடிக்கை

கொழும்பு, செப். 06

எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் புதிய பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கிய கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

50,000,00 புதிய கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் அதன் முதல் தொகுதியாக 50,000 கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கிடைக்குமென குடிவரவு - குடியகல்வு திணைக்களம் கூறியுள்ளது.

அவை கிடைத்தவுடன் தற்போது கடவுச்சீட்டு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு கிட்டுமென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதுவரை நாளாந்தம் வழங்கப்படும் கடவுச்சீட்டு களை 1000 ஆக மட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற் பட்டுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

தற்போது தம்வசம் 30,000 கடவுச்சீட்டுகள் கையிருப் பில் உள்ளதாக குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த நாட்களில் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அலுவலகத்தை அண்மித்து கடவுச்சீட்டை பெறுவதற்காக நீண்ட வரிசைகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# புதுக்குடியிருப்பு சந்தையில் திடீர் சோதனை நடவடிக்கை

முல்லைத்தீவு, செப். 06

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச சபையினரால் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பாவனைக்கு உதவாத வகையில் இருந்த மரக்கறிகள், மீன்கள், இறால், பழங்கள், உப்பு என்பன, வியாபாரிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் உள்ளிட்ட சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபையினர் இணைந்து, இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அதற்கமைய, பாவனைக்கு உதவாத பொருட்கள் மீட்கப்பட்ட வியாபாரிகளுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

(அ)


# பண மோசடி செய்த சீனர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, செப். 06

சீனாவில் பெருமளவில் பண மோசடி செய்த குற்றச்சாட்டின்பேரில் சர்வதேச பொலிஸாரால் நீல எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த சீன பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் கடந்த 3ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளார். 28 வயதுடைய சீன பிரஜை ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சீனாவில் பெருமளவில் பண மோசடி செய்துள்ள நிலையில் அந்நாட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார். இந்த நிலையில், கடந்த 3ஆம் திகதி மாலைதீவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர் அடைந்தபோது குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைதான [illegible] மாலைதீவுக்கு [illegible]

வெல்க தமிழ்
சங்கு எங்கள் சின்னம்
எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!

எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்

தமிழ்ப் பொது வேட்பாளர்
பா.அரியநேத்திரன்
தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 06.09.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 250 பக்கங்கள் : 12







### ஜனாதிபதி ரணிலின் உத்தரவில்

# சுமந்திரனுக்கு ரூ. 10 கோடி அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு!

- சி. சிலக்சன் -

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 06

**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனுக்கு விசேட அபிவிருத்தி நிதியாக 10 கோடி ரூபாய் நேற்று முன்தினம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் மூலம் அறிய வருகின்றது.**

மாகாண சபைகள் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்காக தான் முன்வைத்த தனிநபர் பிரேரணையின் மூன்றாம் வாசிப்பு கடந்த 3ஆம் திகதி - செவ்வாய்க்கிழமை சபையில் முன்வைக்கப்படுவதாக இருந்தது. ஆனால், அன்றைய தினம் அது முன்வைக்கப்பட்டிருக்கவில்லை - இதற்கு, இலங்கை தமிழ் அரசுக் கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிப்பது என்று எடுத்த தீர்மானமே காரணம் என கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி. குற்றஞ்சாட்டியிருந்தார்.

11



## தமிழ்த் தேசியத்திலிருந்து நான் பிறழவே மாட்டேன்!

பிரிட்டனில் சிறீதரன் எம். பி.

லண்டன், செப். 06

தமிழ்த் தேசிய நிலைப்பாடே எனது கொள்கை. இறுதிவரை அந்தக் கொள்கையில் பிறழ்வற்று பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன். இந்த அடிப்படையிலேயே, காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலும் நான்

11

## தமிழ் அரசினரும் ஜனாதிபதியும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர்!

நாமல் எம். பி. சாடல்

கொழும்பு, செப். 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினரும் இணைந்து மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத் திருத்தச் சட்டமூலத்தை விவாதத்துக்கு உட்படுத்தாது நிறைவேற்றி நாசப்படுத்தியுள்ளனர் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ரணில் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தங்களது சொந்த அரசியல் காரணங்களுக்காக தவறவிட்ட பொன்னான வாய்ப்பு இது

11

# 4 இராஜாங்க அமைச்சர்களை பதவி நீக்கினார் ஜனாதிபதி!

கொழும்பு, செப். 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு இராஜாங்க அமைச்சர்களை உடனடியாக அந்தப் பதவிகளில் இருந்து நீக்கியுள்ளார்.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுரத்த, விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹொன் பிரியதர் ஷன டி சில்வா, நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் ஆகியோரே உட னடியாக நடைமுறைக்கு வரும்

11



## ரணில் ஆதரவுக் கூட்டணி நேற்று அங்குரார்ப்பணம்!



கொழும்பு, செப். 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான புதிய கூட்டணி நேற்று வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இந்தக் கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்று பெயரி டப்பட்டுள்ள இந்தப் புதிய கூட்டணி

11

## மாற்றத்துக்கு எதிராக தமிழ் அரசு மாறியது ஏன்?

- சி. சிலக்சன் -

யாழ்ப்பாணம், செப். 06

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் மாற்றத்துக்கு எதிரானதாக மாறியது ஏன் - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க.

தேர்தல் பரப்புரைக்காக நேற்று யாழ்ப்பாணம் வந்த அநுரகுமார திஸநாயக்க வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார்.

அங்கு உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் அடிப்படை சட்டத்தை மீறுகிறார். அவர் நீதிமன்றத்தை மதிப்பதில்லை. தெற்கில் மக்கள்

11

## படகு கவிழ்ந்ததில் மாயமான இளைஞரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 06

மாதகல் கடலில் படகு க்விழ்ந்தில் காணாமல்போன இளைஞரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டது.

மாதகல் கடலில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை மீன்பிடிப்பதற்காக இரு இளம் மீனவர்கள் படகில் சென்றிருந்தனர். அப்போது, படகு கவிழ்ந்ததில் இருவரும் கடலில் மூழ்கினர். ஒருவர் நீந்திக்கொண்டிருந்த நிலையில் சக மீனவர்களால் காப்பாற்றப்பட்டார். மற்றையவர் காணாமல் போயிருந்தார்.

நேற்று மாலைவரை மீனவர்களும் கடற்படையினரும் காணாமல்போன மீனவரை

11

## அகற்றியபோது மிதிவெடி வெடித்து நால்வர் காயம்!

முல்லைத்தீவு, செப். 06

மிதிவெடியை அகற்றும்போது அது வெடித்ததில் மனிதாபிமான மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் நால்வர் படுகாயமடைந்தனர்.

முல்லைத்தீவு - மாங்குளம் - துணுக்காய் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில், அந்தப் பகுதியில் மனிதாபிமான

11

## வடக்கின் வள விற்பனையை முழுமையாக நிறுத்துவோம்!

கிளிநொச்சியில் அநுர தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 06

வடக்கு மாகாணத்தின் வளங்கள் அரசியல்வாதிகளின் உதவியுடன்தான் விற்பனை செய்யப்படுகின்றது. இது முழுமையாக நிறுத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தேர்தல் பரப்புரைகளில் நேற்று ஈடுபட்ட அநுரகுமார திஸநாயக்க, நேற்று மாலை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார்.

11

## ரணிலின் வெற்றியிலேயே இலங்கையின் எதிர்காலம்!

பிரதமர் தினேஷ் நம்பிக்கை

கொழும்பு, செப். 05

"புதிய தலைமுறை நம்மைப் பார்க்கிறது. அந்த வருங்கால சந்ததிக்காக இந்த பயணத்தை மேற்கொள்கிறோம். ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது" - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற புதிய அரசியல் கூட்டணி பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 06 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 21
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திருதியை




**மேடம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் தேடி வரும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்**
வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதுவாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உயரதிகாரிகள் வலியவந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். வாகனம் தொந்தரவு தரும். புதுவேலை கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத்தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் பலமுறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

**துலாம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். வேலைச்சுமை இருக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**தனுசு**
உங்கள் செயலில் வேகம் கூடும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும் கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

# இந்தியாவில் தொழில்நுட்ப ரீதியாக பெண் தலைமைத்துவம் அதிகரிப்பு

## நிதியமைச்சர் நிர்மலா பெருமிதம்

சென்னை, செப். 06

கடந்த 10 ஆண்டுகளில் தொழில்நுட்ப ரீதியாக இந்தியா மிகுந்த வளர்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக கொண்ட வளர்ச்சி அதிகரித்துள்ளது- இவ்வாறு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சார்பில் "அரசியல், அதிகாரம் உள்ளிட்டவற்றில் இருக்கும் கண்ணுக்குத் தெரியாத தடைகளை உடைத்து வளர்ச்சியடையும் பெண்கள்" என்ற தலைப்பில் சென்னையில் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்குக்கு இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பின் சென்னை மகளிர் பிரிவுத் தலைவி திவ்யா அபிஷேக் தலைமை தாங்கினார். நிதியமைச்சர் நிர்மலா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இதில் நிர்மலா உரையாற்றுகையில்,



இலவச மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 17 கோடி பெண்களுக்கு காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டுள்ளது. இது மொத்தம் உள்ள காப்பீட்டு அட்டையில் 50 சதவீதம். விரைவு நீதிமன்றங்களின் மூலம் 2, 53, 000 பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. பங்குச்சந்தையில் இடம் பெற்றுள்ள முதல்100 நிறுவனங்களின் இயக்குநர்களில் 22 சதவீதம் பேர் பெண்கள்- என்றார்.

மேலும், இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மையத்தின் இயக்குநராக ஒரு பெண் தலைமை ஏற்றுள்ளது பெருமைக்குரியது எனறும் அவர் கூறினார்.

(எ)

# போர்க்கால அடிப்படையில் தி. மு. க. செயல்பட வேண்டும்

## அ. தி. மு. க. வலியுறுத்தல்

சென்னை, செப். 06

தமிழகத்தில் வெற்றிடமாக உள்ள அனைத்து மருத்துவப் பணியிடங்களையும் போர்க்கால அடிப்படையில் நிரப்ப தி. மு. க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு முழு அளவில் மருத்துவ வசதி



கள் அளிக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 2012 ஆம் ஆண்டு மருத்துவப் பணியாளர் தெரிவு சபையை ஆரம்பித்தார். இதன்மூலம், சுமார் 7,629 மருத்துவர்கள், 18, 846 தாதியர்கள் உட்பட சுமார் 31, 250 மருத்துவப் பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். ஆனால், 40 மாத கால தி. மு. க. ஆட்சியில் மருத்துவப் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்படவில்லை.

10 ஆண்டுகால அ. தி. மு. க. ஆட்சியில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும், 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டன என்றும் பழனிச்சாமி விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கு தமிழக அரசிடம் சரமாரி கேள்விகள்

சென்னை, செப். 06

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் தொடர்பான வழக்கில் தமிழக அரசுக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகள் சரமாரி கேள்வி எழுப்பியுள்ளனர்.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 70 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கை சி. பி. ஐ. விசாரணைக்கு மாற்றக் கோரி அ. தி. மு. க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்குகள் விசாரணைக்கு வந்தபோது,

கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பில் 7 பேர் குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் அரசியல் [illegible] கவோ அல்லது அதிகாரிகள் மற்றும் பொலிஸ் துறையினருக்கு தொடர்பு இருப்பதாகவோ தெரியவில்லை. குற்றம் செய்த அனைவரும் கைதாகி விட்டனர். உயிரிழப்பு சம்பவத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. எனவே இந்த வழக்கை சி. பி. ஐக்கு மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று அரசு தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார்.

அப்போது, "கள்ளச்சாராய மரணம் தொடர்பில் பொலிஸாருக்கு எப்போது தகவல் கிடைத்தது, முதல் உயரிழப்பு எப்போது நடந்தது, யார், யார் எந்தெந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர், பலர் இறந்துவிட்டனர் என மருத்துவர்கள் தகவல் தெரிவித்த பிறகுதான் பொலிஸாருக்கு தகவல் தெரியுமா, உயிரிழப்பு சம்பவத்துக்கு கள்ளச்சாராயம் காரணமல்ல என எதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார், பின்னர் எதற்காக மாவட்ட எஸ். பியை பணியிடை நீக்கம் செய்தீர்கள், பின்னர் எதன் அடிப்படையில் எஸ். பியின் இடைநீக்கம் இரத்து செய்யப்பட்டது, மற்ற பொலிஸார் மீதான நடவடிக்கைகளும் இரத்து செய்யப்பட்டு விட்டதா?, ஒருமாதத்தில் என்ன மாறுதல் நடந்து விட்டது என்பதற்காக எஸ். பி. மீதான நடவடிக்கை திரும்பப் பெறப்பட்டது, இல்லையென்றால் எந்த ஆதாரமும் இல்லாமல் எஸ். பியை இடை நீக்கம் செய்தீர்களா?" என்று நீதிபதிகள் சரமாரியாக கேள்வி எழுப்பினர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.09.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தியா கூறியதா?

தமிழ் அரசியலில் என்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் உடன டியாக இந்தியாவைத் திரும்பிப் பார்க்கும் ஒரு நிலைமை உண்டு. இது ஒரு நோயாகவே மாறிவிட்டது. இந்தியாவின் தலையிடும் செல்வாக்கு நன்கு அறியப்பட்ட ஒன்றுதான். ஓர் உடனடி அயல்நாடு என்னும் வகை யிலும் வரலாற்று ரீதியாக தமிழர் பிரச்னையில் தலையீடு செய்யும் ஒரு நாடு என்னும் வகையிலும் இந்தியாவின் கரிசனைகளும் - செல் வாக்கும் - அதிகாரமும் தமிழர் அறிந்த ஒன்றுதான். இதனைத் தங்களுக்கு சாதகமாகக் கைக்கொள்பவர்கள் தங்களின் சுயநல தீர்மா னங்களுக்காக இந்தியாவை அவ்வப்போது துணைக்கு அழைத்துக் கொள்வதும் உண்டு.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சடுதியாக சஜித் பிரேமதாஸவை ஆத ரிக்கும் தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. இப்படியான ஒரு தீர்மா னத்தை எடுத்தமைக்கு பின்னால் இந்தியா இருப்பதான ஒரு கதையை மெதுவாக தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பரப்ப முயற்சிக் கின்றனர் எனத் தெரிகின்றது. சுமந்திரன் அணியின் முடிவுக்கு பின்னால் இந்தியா இருக்கிறது என்றும் குறிப்பாக, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வந்து சென்ற பின்னர்தான் தமிழ் அரசுக் கட்சி யின் முடிவு வெளியாகியது. அப்படியென்றால், அவர்களின் முடிவுக்குப் பின்னால் இந்தியாதானே இருந்திருக்க வேண்டும். இப்படியான கேள்விகள் எட்டிப் பார்க்கின்றன.

ஆயுதப் போராட்ட காலத்தில் இந்தியா என்பது ஒரு மந்திரமாகவே இருந்தது. அந்த மந்திரத்தை ஒவ்வொருவரும் தங்களுக்கு விரும்பிய வாறு உச்சரித்துக் கொண்டனர். விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அனைத்துப் பிரதான இயக்கங்களுமே இந்தியாவிடம் பயிற்சி பெற்று பணம் பெற்று வளர்ச்சியடைந்த இயக்கங்கள்தான். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் அனைத்து இயக்கங்களுமே இந்தி யாவிடம் பணம் பெற்றவர்கள்தான். இதில் யார் அதிகம் பெற்றார்கள் - யார் குறைவு என்பதுதான் விவாதத்துக்கு உரியது. ஒரு காலத்தில் அனைத்துமே இந்தியாவின் ஆசீர்வாதத்தின் பின்னணியில்தான் இடம்பெற்றது.

இந்தப் பின்புலத்தில்தான் அனைத்துக்கும் இந்தியாவைத் திரும்பிப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டது. வடக்கு, கிழக்கில் எது நிகழ்ந்தாலும் - ஆயுத இயக்கங்களுக்குள் என்ன நிகழ்ந்தாலும் - தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் என்ன நிகழ்ந்தாலும் - உடனடியாகவே இந்தியாவை திரும்பிப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டது. இப்போதும், அது தொடர் கின்றது. ஆனால், உண்மையில் அன்றைய இந்தியா இப்போதில்லை - இப்போதைய இந்தியாவின் தேவைகளும் கரிசனைகளும் தலை யிடும் தேவைகளும் ஏன் ஆற்றலும்கூட மாறிவிட்டது. இந்தியா நினைத்தால்போல அனைத்திலும் தலையிட்டு விடமுடியாது - அதற் கான அரசியல் சூழலும் இல்லை.

குறிப்பாக, 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் இந்தியா பிரத்தியேக தலையீடுகளை செய்ய முயற்சிக்கவில்லை. அப்படி செய்ய வும் முடியாது. இந்தப் பின்புலத்தில் தமிழ் கட்சிகளுக்கு அறிவுரை கூறு வதிலும் இந்தியா பெரிதாக நாட்டம் கொள்வதாகவும் தெரியவில்லை. இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஏன் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கின்றது?

அவர்களிடம் பதில் இருக்கப் போவதில்லை. ஆனால், ஒரு பதில் இருக்கின்றது - சுயநலன்தான் அந்தப் பதில். தங்களின் சுயநலனுக்காக எடுத்த முடிவை நியாயப்படுத்துவதற்காக கூறும் காரணம்தான் இந்தியா. ஏனெனில், இந்தியா என்று கூறிவிட்டால் அதனை மற்ற வர்கள் விமர்சிக்க மாட்டார்கள் என்றே தமிழ் அரசுக் கட்சி கருதுகின்றது. ஏனெனில், இவ்வாறான கதைகள் மிகவும் வசதியானவை. எவருமே எதையும் கேட்கமாட்டார்கள். மக்கள் மத்தியிலும் இது தொடர்பில் பெரியளவில் விழிப்புணர்வில்லை. இந்தியாவைக் கொண்டு மக்களை ஏமாற்றுவது இலகுவானது. தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் முற்றி லும் அதிலுள்ள ஒரு சிலரின் தனிப்பட்ட இலாபங்களுக்கானதே தவிர தமிழ் மக்களுக்கானது அல்ல.

# வேலுகுமாரின் பெயருக்கு களங்கம்; பதிவுகளை நீக்க நீதிமன்று உத்தரவு

கொழும்பு, செப். 06

பாராளுமன்ற உறுப்பி னர் வேலுகுமாரின் நற்பெய ருக்கு களங்கம் விளைவிக் கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜய சேகரவின் முகநூல் பக்கம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி யின் சமூக வலைத்தளங் களில் வெளியிடப்பட்டுள்ள பதிவுகளை நீக்குமாறு கொழும்பு மாவட்ட நீதி மன்றம் நேற்று வியாழக் கிழமை உத்தரவு பிறப்பித் துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரான வேலு குமார், எதிர்வரும் ஜனா திபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதர வளிப்பதாக அறிவித்து அவ ருடன் இணைந்துகொண் டார்.

இந்நிலையில், ஜனாதி பதியை ஆதரிக்கும் முடிவை எடுப்பதற்காக வேலுகுமார் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளார் என தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பான காணொலி அவரின் முக நூல் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் சமூகவலைத்தள பக்கங்களில் பதிவிடப்பட் டிருந்தன. இந்தக் குற்றச் சாட்டை நிராகரித்த வேலு குமார், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட நிலையில் வேலு குமார் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிவேந்திரன், கனிஷ்ட சட்டத்தரணி சிவானந்தராஜா உள்ளிட்ட சட்டக்குழுவினர் முன்னி லையாகினர்.

இதன்போதே தயாசிறி ஜயசேகரவின் உரையை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதற்கு தடை விதித்து இந்த உத்தரவைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கமநல சேவைகளிடையேயான போட்டி கரவெட்டி நிலையம் மூன்றாமிடம்!

வடமராட்சி, செப். 05

இலங்கை கமநல சேவை களுக்கு இடையிலான போட்டியில் பி பிரிவில் கர வெட்டி கமநல சேவைகள் நிலையம் மாகாண மட்டத் தில் முதல் இடத்தையும் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்றது.

இதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பு கமநல அபிவிருத்தி மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட விவசாய அமைச் சர் மகிந்த அமரவீர கர வெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மீ. கோபி நாத்திடம் விருதைக் கைய ளித்தார். (ஐ-2)



# வட்டுக்கோட்டை வன்முறை; சந்தேகநபர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 06

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கணவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஒரு வர் கைது செய்யப்பட்டுள் ளார்


இந்தத் தாக்குதலின் போது குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருந்த தாய் மற்றும் சிறுவர்கள் உட்பட ஐவர் காயம டைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்ப வம் குறித்து வட்டுக் கோட்டை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்த ஊரவர்கள் பொலிஸ் நிலை யம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்திலும் ஈடு பட்டிருந்தனர்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலி ஸார் பின்னர் சந்தேகநபர் ஒருவரை கைது செய்தனர். அவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நட வடிக்கை எடுத்துள்ள பொலிஸார் ஏனைய ஐந்து சந்தேகநபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத் துள்ளனர். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 10இல்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியான காலத்திலும் ஜனாதிபதி அரச ஊழியருக்கு ரூ. 10,000 வழங்கினார்!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறுகிறார்

கொழும்பு, செப். 06

"பொருளாதார நெருக்கடியான காலத்திலும் கூட ஜனாதிபதி அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாவை வழங்கியதாக" நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.



கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அரச ஊழியர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், அதனை அறவே குறைக்கக் கூடாது என்று தெரிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை நிராகரித்தார்.

எதிர்க்கட்சிகள் எவ்வகையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும் பொருளாதார நெருக்கடியான காலத்திலும் கூட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாவை வழங்கியிருந்தார்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட 2022 ஆம் ஆண்டளவில், 13 இலட்சத்து எண்பதாயிரம் அரச ஊழியர்கள் இருந்தனர். அவர்களுக்கான சம்பளம், 95 பில்லியன் ரூபாவாகும். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி அமைச்சராக பதவியேற்கும் போது அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை காணப்பட்டது.

அதன்படி, இப்பிரச்னைக்குத் தீர்வு காண பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதில் ஒன்று அரசு ஊழியர்களின் சம்பளத்தை குறைக்க வேண்டும் என்பது. ஆனால் ஜனாதிபதி அதனை கடுமையாக நிராகரித்தார்.

கடந்த காலத்தில் சம்பளமே வழங்கமுடியாத நிலை காணப்பட்டிருந்ததை இன்று சிலர் மறந்து விட்டார்கள். அரச ஊழியர்களின் சம்பளத்தை கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே பத்தாயிரம் ரூபாவால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகரித்தார்.

இதனால், திறைசேரியின் மாதாந்தச் செலவு 12 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமானது-என்றார். (அ)

# 4 முச்சக்கரவண்டி சங்கங்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, செப். 06

நாட்டின் நான்கு பிரதான முச்சக்கரவண்டி சங்கங்கள் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் தொழிற்சங்கம், தேசிய டக்சி முச்சக்கர வண்டி தொழிற்துறை சங்கம், ஐக்கிய பயணிகள் போக்குவரத்து சேவை வல்லுநர்கள் சங்கம், மேல் மாகாண முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் என்பனவே ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

முச்சக்கரவண்டி சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் காலை கொழும்பு காலிமுகத்திடலில் ஒன்றுகூடிய துடன், தங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்திக்க வேண்டும் என விடுத்த கோரிக்கையை அடுத்து அந்த இடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேக பூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடந்த 25 வருடங்களாக நான்கு நிறைவேற்று ஜனாதிபதிகளின் கீழ் தீர்க்கப்படாத முச்சக்கரவண்டி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் தொடர்பான பிரச்னைக்கு 24 மணித்தியாலங்களில் தீர்வை வழங்கியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்த முச்சக்கர வண்டி சாரதிகள், கடந்த காலத்தில் தங்களின் தொழில்களை மேற்கொள்ள முடியாமல் பல நாட்களாக எரிபொருள் வரிசையில் தவித்ததாகவும் அந்த நிலையில் இருந்து ஜனாதிபதியே தங்களை மீட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மீண்டும் அவ்வாறானதொரு நிலைமைக்கு முகம் கொடுக்க தாம் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

2025 ஆம் ஆண்டு முதல் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பை அறிமுகப் படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

# அரச ஊழியர்களுக்கு அரசு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை!

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 06

"பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடாத அரச ஊழியர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக, தம் பட்டம் அடிக்கின்ற அரசாங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடாத அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வழங்கபோவதாக தெரிவித்தும் இதுவரை அதனை அரசாங்கம் வழங்கவில்லை.

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடாத அரச ஊழியர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை. ஆனால் இன்று அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்போம் என பொய்யான வாக்குறுதியை வழங்கியுள்ளது.

எனவே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடாதவர்களுக்கு வழங்கப்படும் என குறிப்பிட்ட தொகையை அரசாங்கம் உடனடியாக வழங்கவேண்டும். தற்போதைய அரசாங்கத்தினால் அது முடியாவிட்டால் அரச சேவையில் உள்ளவர்களுக்கு எதிர்காலத்தில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளும் என்பதில் எவ்வாறு நம்பிக்கை கொள்ளமுடியும்-என்றார். (அ)

# ரணிலின் பொய் வாக்குறுதிகளால் நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது!

## அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது தோல்வியை உணர்ந்த நிலையிலேயே அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு என்ற பொய்யான வாக்குறுதியை கையில் எடுத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

எல்பிட்டியவில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றும் போதே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது தோல்வியை தற்போது உணர்ந்துள்ளார். இதனை கருத்தில் கொண்டு அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்தல் போன்ற நடைமுறைச் சாத்தியமற்ற உறுதிமொழிகளை வழங்க ஆரம்பித்துள்ளார்.

நாட்டின் மீதும், நாட்டு மக்கள் மீதும் உண்மையான அக்கறை கொண்டிருந்தால், தற்போது வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை கடந்த காலத்திலேயே நிறைவேற்றியிருக்க முடியும்.

ஆட்சியை இழக்கப் போவதை உணர்ந்தே, தேர்தல் வாக்குறுதிகளை கொடுக்க ரணில் ஆரம்பித்துள்ளார். சில மாதங்களுக்கு முன்பு அரச ஊழியர்கள் ஊதிய உயர்வு கேட்டபோது, பணப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி மறுத்துவிட்டார்.

இப்போது எப்படி சம்பளத்தை உயர்த்துவார். அவர் விவசாய கடன்களை தள்ளுபடி செய்வேன் என்றும் கூறுவது பொய். அது சாத்தியம்தான். ஆனால், முதலில் ஒரு முறையான பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும், அவர் இப்போது தோல்வி பயத்தால் நடைமுறைக்கு மாறான மற்றும் குழப்பமான வாக்குறுதிகளை வழங்குகிறார்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் இதுபோன்ற வாக்குறுதிகளை மக்கள் கேட்டு வருவதால் இதுபோன்ற பொய்யான வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்ற முடியாது.

தோல்விப் பயத்தால் நடைமுறைக்கு மாறான மற்றும் குழப்பமான வாக்குறுதிகளை வழங்குகிறார்-என்றார். (அ)

# வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார் ஜனாதிபதி!

கொழும்பு, செப். 06

அரச ஊழியர்களின் தபால் மூலமான வாக்குகள் அனைத்தும் தனக்கு சாதகமாக இருப்பதாக அறியக் கிடைத்துள்ளதாகவும் எனவே வாக்களித்துள்ள அனைவருக்கும் தான் நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாப்பஹுவவில் இடம் பெற்ற 'இயலும் சிறீ லங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தபால் வாக்குகள் எனக்கு சாதகமாக இருப்பதாக அறியக் கிடைத்தது. எனக்கு வாக்களித்தவர்களுக்கு நன்றி. இன்று தேர்தலில் போட்டியிட வந்திருக்கும் 38 வேட்பாளர்களும் நாடு நெருக்கடியிலிருந்த போது நாட்டை மீட்க வரவில்லை.

விவசாயிகளே நாட்டை மீட்பதற்கு பாடுபட்டனர். எமக்கு கடன் வழங்கிய நாடுகளின் உதவியுடன் இன்று மீண்டு வருகிறோம். எனது தேர்தல் விஞ்ஞாபனம் பிரதான ஐந்து விடயங்களை இலக்காக கொண்டதாக அமைந்திருக்கிறது.

எதிர்கட்சிகள் இன்று வரியை குறைத்து மக்களுக்கு நிவாரணம் தருவதாக கூறுகின்றனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி சரிவு கண்டமைக்கு காரணமே இந்த வரி குறைப்பு



பட்டமை என்பதை அனைவரும் உணரவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியிடமும் ஜே.வி.பியிடமும் எந்த திட்டமும் இல்லை என்பதை அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களே உறுதிப்படுத்துகின்றன. அவர்கள்

அரசாங்கம் முன்னெடுக்கும் நல்ல திட்டங்களையும் அவர்கள் எதிர்க்கின்றனர்.

சஜித் பிரேமதாச தற்போது ஐக்கிய தேசிய கட்சியில் இல்லை. அவரால் அனுரகுமார திசநாயக்கவை தோற்கடிக்க முடியாது. சஜித் பிரேமதாசவே அனுரகுமார திசநாயக்கவைப் பலப்படுத்தினார். இதுவரையில் இலங்கையில் ஆட்சி செய்தவர்கள் ஆளும் தரப்பை மிஞ்சி செல்ல இரண்டாம் தரப்புக்கு இடமளிக்கவில்லை. அதே போல் எதிர்க்கட்சிகளும் தம்மை மிஞ்சி செல்ல மற்றுமொரு தரப்புக்கு இடம் கொடுக்கவில்லை.

நான் எதிர்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் ஜே.வி.பிக்கு இடமளிக்கவில்லை. அதனால் அனுரகுமார திசநாயக்க மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் விவசாய அமைச்சராக செயற்பட்டார்.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் நாம் ஜேவிபியை கட்டி வைத்திருந்தோம்.

சஜித் பிரேமதாசவால் அதனை செய்ய முடியாமல் போனது. நாடாளுமன்றத்தில் சென்று வீண் பேச்சு பேசுவார். நாளாந்தம் ஒரு மணித்தியாலம் பேசிக்கொண்டிருப்பார்.

அதனால் நூற்றுக்கு 2 சதவீத ஆதரவு இருந்த அனுரகுமார எழுந்து வந்திருக்கிறார். அதனால் சஜித் இன்று அனுரவோடு போராட வேண்டிய நிலை வந்துள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி விவசாய யுகத்தை மிகவிரைவில் ஆரம்பிப்போம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 06

**ஏற்றுமதி விவசாய யுகத்தை ஆரம்பிக்கவுள்ளதாக சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மஹியங்கனை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் வேலைத்திட்டங்களை முழுமையாக நிறைவேற்றவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

அதேபோன்று சில பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை என்பதனையும் ஏற்றுக்கொள்கிறோம்.


எனினும் அவற்றை ஒரே சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள முடியாது.

எதிர்வரும் 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் இயலும் ஸ்ரீலங்கா என்ற எண்ணக்கருவின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது திசைக்காட்டி மாற்றத்தை ஏற்படுத்துகிறதா? அல்லது நாம் மாற்றத்தை ஏற்படுத்துகிறோமா?

திசைக்காட்டிக்கு எப்போதும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளைப் போன்று எமது விவசாயத்தையும் ஏற்றுமதி பொருளாதார நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



நாம் யாருடனும் சென்று இணையவில்லை.

எனினும் அநுரகுமார திஸாநாயக்க, முன்னதாக மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றதுடன் நல்லாட்சி அரசாங்கத்தின்போது தங்களுடன்இணைந்து கொண்டார்-என்றார்.

(அ)

# தமிழ் அரசின் பெரும்பாலோனோர் பொது வேட்பாளருக்கே ஆதரவு!

யாழ்ப்பாணம், செப். 06

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு எதிர்ப்பு என்ற துருவ நிலை, தமிழ் வாக்காளர்களிடையே, பொதுவேட்பாளருக்கான, வாக்கு வங்கியை அதிகரிக்கும் என தமிழ்ப் பொதுக்கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள், பொது வேட்பாளருக்கான ஆதரவு நிலைப்பாட்டோடு உள்ளதால், அக் கட்சியிலிருந்து எழும் எதிர்ப்புத் தொடர்பில், கரிசனை கொள்ளத் தேவையில்லை என தமிழ் பொதுக்கட்டமைப்பு உறுப்பினர் அரசியல் ஆய்வாளர் எம்.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் அலுவலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(அ)

# தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, செப். 06

வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை பற்றிய பொய்யான அறிக்கையொன்றை வெளியிட்ட பஹியங்கல ஆனந்த சாகர தேரருக்கு எதிராக முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

ஆதாரமற்ற அறிக்கையை வெளியிட்டமையால் தமது நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்துக்கு 500 மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு மனுஷ நாணயக்கார தனது சட்டத்தரணிகள் மூலம் ஆனந்த சாகர தேரருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

முன்னாள் அமைச்சரின் உறவினருக்குச் சொந்தமான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஆட்களை அனுப்பி பெருந்தொகையான பணத்தை அவர்கள் ஈட்டியுள்ளதாக ஆனந்த சாகர தேரர் தெரிவித்த அறிக்கையில் எந்த அடிப்படையும் இல்லை எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ)

# விஜயதாச ராஜபக்ஷவின் விஞ்ஞாபனம் வெளியீடு!

கொழும்பு, செப். 06

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் திறன் மிக்க நாடு என்னும் தொனிப்பொருளில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று சர்வமத தலைவர்களின் பங்கேற்புடன் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம் பெற்றது. இதன் போது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ-

நாடு வங்குரோத்து நிலையை அடைந்தமைக்கு ஊழல் மோசடிகள் பிரதான காரணமாக அமைந்துள்ளன. அரசியல்வாதிகள் மற்றும் அரச ஊழியர்கள் என பலரும் இணைந்து மேற்கொள்ளும் மோசடிகளின் காரணமாக நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அதனை தடுக்கும் வகையிலான நடவடிக்கைகள் என்னுடைய விஞ்ஞாபனத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

நாடு நெருக்கடியை எதிர்கொண்ட சமயத்தில் சர்வதேச நாணய நிதியத்தை நாடினோம். ஆனால் சர்வதேச நாணய நிதியம் 17 ஆவது தடவையாகவும் எம்மிடம் ஏமாற தயாரில்லை என கூறி எம்முடைய கோரிக்கையை ஏற்க முடியாது என கூறியது. இருந்த போதிலும் நீண்ட கலந்துரையாடல்களை தொடர்ந்து நிபந்தனையடிப்படையில் எம்முடைய நாட்டிற்கு ஒத்துழைப்பை வழங்க உடன்பட்டுள்ளது.

அந்த வகையில் சட்ட ஏற்பாடுகள் 80 வரையில் நிபந்தனையில் உள்வாங்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் ஊழல் ஒழிப்பு சட்டமூலம், தேர்தல் செலவீன ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் என்பன கொண்டுவரப்பட்டுள்ளன. அந்த வகையில் என்னுடைய விஞ்ஞாபனத்தில் நாட்டை கட்டியெழுப்பும் மார்க்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# சர்வதேச தரம்வாய்ந்த இளைஞர் அபிவிருத்தி மையங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை!

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச

கொழும்பு, செப். 06

சர்வதேச தரம் வாய்ந்த இளைஞர் அபிவிருத்தி மையங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் இளைஞர் கொள்கை வெளியீட்டு நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. அதன் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் இளைஞர் யுவதிகளை ஏமாற்றி ஆட்சியை கைப்பற்றும் முயற்சியாக இந்த இளைஞர் கொள்கையை முன்வைக்கவில்லை.

வரலாற்றில் முதற்தடவையாக நாட்டிற்கு சேவையாற்றிய எதிர்கட்சி என்றால் ஐக்கிய மக்கள் சக்தியையே குறிப்பிடலாம். எம்முடைய கட்சி மூச்சு திட்டம், சிமார்ட் வகுப்பறை திட்டம் என்பவற்றை நாட்டிற்காக முன்னெடுத்துள்ளது. அதுவும் 10 மில்லியன் ருபாவிகும் அதிக தொகை பணத்தை பயன்படுத்தி இந்த திட்டங்களை எதிர்க்கட்சி முன்னெடுத்துள்ளது.

இன,மத, மொழி, போமின்றி அடிமைகளாக இல்லாது கௌரவமாக வாழும் சூழலை உருவாக்குவோம். அதற்கான ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவுள்ளோம். இளைஞர் யுவதிகள் தம்முடைய திறன்களுக்கு அமைய சமூகத்தில் மிளிர வல்ல ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவுள்ளோம். வர்த்தகர்கள் இலச்சக்கணக்கில் உருவாகும் போது நாடு வழர்ச்சி அடையும்.

இந்தியாவிடமிருந்து எமக்கு கற்றுக்கொள்ள பல விடயங்கள் உள்ளன. திறன்வாயந்த கல்வி நிலையங்கள் பல இந்தியாவில் உள்ளன. அதன் ஊடாக சிறந்த எதிர்காலத்தை நோக்கி பயணிக்கின்றனர். நாமும் கூட அத்தகைய இலக்கை நோக்கி பயணிக்க வேண்டும்.

பிரதேச செயலக பகுதிகளை மையமாக கொண்டு சர்வதேச தரமுள்ள இளைஞர் அபிவிருத்தி மைத்திய நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன் ஊடாக சர்வதேசத்தின் மத்தயில் புதிய தொழிநுட்ப திறன்வாய்ந்த இளைஞர் யுவதிகளை கொண்டு சேர்ப்பதே எம்முடைய எதிர்பார்ப்பாகும்-என்றார்.

(அ)

# "சுபீட்சமான எதிர்காலத்துக்காக மக்கள் இன, மத பேதமின்றி இணையவேண்டும்"

மன்னார், செப். 06

தாய் நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்துக்காக மக்கள் இன, மத பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் என ஜனசெத முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனசெத முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பத்தர முல்லை சீலரத்ன தேரர் நேற்று மன்னாரில் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

ஜனசெத பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்ல சீலரத்ன தேரருக்கு ஆதரவு கோரி, நேற்று காலை மன்னார் பேருந்து நிலையத்தில், துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

பத்தரமுல்ல சீலரத்ன தேரர், ஜனசெத பெரமுனவின் ஆதரவாளர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்லை சீலரத்ன தேரர், தாய் நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்துக்காக மக்கள் இன, மத பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் அரசியல் கட்சிகள் சஜித் பிரேமதாஸவுக்கு தங்கள் ஆதரவை வழங்கி ஒப்பந்தங்களில் கைச்சாத் திட்டுள்ளனர்.

இங்கு சஜித் பிரேமதாச மட்டுமல்ல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுமே கூட்டணிகள் உருவாகும் போது ஒப்பந்தங்களை தூக்கி எறிந்து விடுவார்கள்.

அனுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ, துலிப் ஜயவீர போன்றவர்களும் அவ்வாறானவர்களே.

இவ்வாறான தலைவர்களை தேர்வு செய்தால் மேலும் பாதிப்படைவது வடக்கு கிழக்கு மக்களே.

எனவே உங்கள் வாக்குகளை வீணாக்காது டிரக்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள்-என்றார்.

# சமுதாயத்தை ஏமாற்றும் தேசிய மக்கள் சக்தியினர்

## நுவான் போபகே குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 06

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு சென்று அவர்களுடன் இணைந்து செயற்படவுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தி கூறுவதன் ஊடாக சமுதாயம் ஏமாற்றப்படுவதாக சோசலிச மக்கள் மன்றத்தின் ஜனாதிபதி வேட்பாளர் சட்டத்தரணி நுவான் போபகே தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்ட முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் வர்த்தக சம்மேளனம் ஒன்று அண்மையில் இடம்பெற்றிருந்தது.

சமூகவியல் பொருளாதார முறைமை மீறப்பட்டுள்ளமையினால் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாட்டைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல முடியாதென அவர்கள் முன்னர் குறிப்பிட்டனர்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லவுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, சமுதாயத்தை ஏமாற்றும் செயற்பாடு இடம்பெற்றுள்ளது.


எனவே, இந்த வேலைத்திட்டத்துக்கு எதிராகத் தேசிய மக்கள் சக்தியில் உள்ளவர்களை தங்களுடன் இணைந்து கொள்ளுமாறு கோருகிறோம்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்றில் ஆர்வத்துடன் நடந்தது தபால் மூல வாக்களிப்பு





அக்கரைப்பற்று, செப். 06

**எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு அக்கரைப்பற்றில் ஆர்வத்துடன் நடைபெற்றது. நேற்றைய தினம் ஆசிரியர்கள், கல்வித்துறை அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் போன்றோர் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபட்டனர்.**

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் போன்றோர் தாபல் மூல வாக்களிப்பில் மும்மூரமாக ஈடுபட்டதனை அவதானிக்க முடிந்தது.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்படுத்தப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில் சுமார் 50 ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். காலை 8. 30 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமானது. கல்லூரி அதிபரும் கல்வி நிர்வாக சேவை அதிகாரியுமான ஏ. எச். பௌஸ் தலைமையில் வாக்களிப்பு நடைபெற்றது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் கீழ் இம்முறை 746 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்கமைய, அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் 250 பேரும், அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் 260 பேரும், பொத்துவில் கல்விக் கோட்டத்தில் 236 பேரும் தபால் மூல வாக்களிப்புக்கென தகுதி பெற்றிருந்தனர்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் நாடு தழுவிய ரீதியில் ஏழு இலட்சத்து 12 ஆயிரத்து 319 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கென தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 54 ஆயிரத்து 858 பேர் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 26 ஆயிரத்து 778 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 ஆயிரத்து 116 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 14 ஆயிரத்து 964 பேரும் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# பாவனையின்றி அழிந்துவரும் கரப்பந்தாட்ட மைதானம்!

சாய்ந்தமருது, செப்.06

விளையாட்டுத் துறைசார் நிபுணர்களின் ஆலோசனை பெறப்படாமல் சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கரப்பந்தாட்ட மைதானத்தின் சுற்று வேலியும் கரப்பந்தாட்ட இரும்புக் கம்பியும் துருப்பிடித்து அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் சகல பகுதிகளிலும் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தும் நோக்கில் கிராமத்துக்கு ஒரு கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் சாய்ந்தமருதில் இந்த மைதானம் அமைக்கப்பட்டது.

சாய்ந்தமருதில் கரப்பந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடம் இருந்தும் மிகவும் நெருக்கமான பகுதியில் இந்த மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.


சூரிய ஒளியின் தாக்கத்தை தவிர்க்க வடக்கு தெற்காக அமைய வேண்டிய மைதானம் கிழக்கு மேற்காக அமையப் பெற்றுள்ளதால் காலையிலும் மாலையிலும் இந்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக விளையாட்டுத் துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, கரப்பந்தாட்டம் விளையாடும் எல்லை சீமெந்து கட்டாக அமைந்திருப்பதால் விளையாடும் போது வீரர்கள் உபாதைக்குள்ளாகும் சந்தர்ப்பம் அதிகமாகவுள்ளது.

பாவனைக்கு இன்னும் கையளிக்கப்படாத இந்த மைதானத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து பொருத்தமான இடத்தில் அமைக்குமாறு பிரதேச விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)








ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு அம்பாறை, சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் அரச உத்தியோகத்தர்கள் பங்கேற்று ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

# கிழக்கில் அரச மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை பிரிவு

பொத்துவில், செப். 06

பொத்துவில் ஆதார மருத்துவமனையில் அறுகம்குடா மற்றும் உல்லை பிரதேசங்களுக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு அமைப்பது தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடல் நடைபெற்றது.



பொத்துவில் ஆதார மருத்துவமனையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், இலங்கை சுற்றுலா அதிகார சபையின் உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன், ஆகியோரின் பங்கேற்புடன் நடை பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார மருத்துவமனைகளின் வைத்திய அத்தியட்சகளான நித்தின் ரணவக்க, ஏ. பி. மசூத், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ. எம். மாஹிர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் பொறியியலாளர் ஏ. எம். ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து உயர்மட்ட குழுவினர் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு அமையவுள்ள இடங்களையும் பார்வையிட்டனர்.

பொத்துவில் ஆதார மருத்துவமனையில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அறுகம்குடா பிரதேசத்துக்கு வருகைதரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரிதும் நன்மையடைவதுடன், எமது நாட்டுக்கும் பெரும் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்ற ஒரு நிறுவனமாகவும் பொத்துவில் மருத்துவமனை திகழும்.

இலங்கை சுற்றுலா அதிகார சபை குறித்த கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு வசதியை ஏற்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# பாடசாலை மாணவர்களுக்கு ஏ.ஐ. தொழில்நுட்ப கருத்தரங்கு

களுவாஞ்சிக்குடி, செப். 06

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் வலையமைப்பு தொழில்நுட்பம் (6 ஜி) மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏ ஐ) சம்பந்தமான கருத்தரங்கு நடைபெற்றது.

அமெரிக்கா இன்ரல் நிறுவனத்தில் சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானியாக கடமையாற்றும் இரத்னேஸ்வரன் வன்னிதம்பி, மாணவர்களுக்கு (6 ஜி மற்றும் ஏ ஐ) விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்தினார்.

பாடசாலை அதிபர் எம். சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றிய மாணர்வர்கள், வலையமைப்பு (1 ஜி - 6 ஜி) தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறி (ஏ ஐ) தொழில்நுட்பம் பற்றியும் பல்வேறு விடயங்களை மிகுந்த ஆர்வத்துடன் அறிந்து கொண்டனர்.

அத்துடன் குறித்த கருத்தரங்கில் கேள்விகளை எழுப்பிய மாணவர்களுக்கு விஞ்ஞானியால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

(எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் 'தரங்சக்தி' பயிற்சியில் பங்கேற்கும் இலங்கை விமானப்படை!

## இறுதி கட்டப் பயிற்சி 14 ஆம் திகதி ராஜஸ்தானில்



கொழும்பு, செப். 06

**இந்தியாவின் 'தரங்சக்தி' பயிற்சியில் இலங்கை விமானப்படையின் பீச்கிராப்ட் விமானம் பங்கேற்கின்றது.**

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான பீச்கிராப்ட் விமானம் இந்திய விமானப்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தரங் சக்தி' வான் போர்ப் பயிற்சியில் இணைந்துள்ளது. மேலும் இந்த பயிற்சியில் 11 நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 விமானங்கள் பங்கேற்றன.

'தரங் சக்தி 'விமானப் போர் பயிற்சியின் முதல் கட்டம் ஒகஸ்ட் 06 முதல் 14 ம் திகதி வரை இந்தியாவின் தமிழ்நாடு, சூலூர் விமானப்படை தளத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன், இரண்டாவது மற்றும் இறுதி கட்டப் பயிற்சிகள் 14 ஆம் திகதி ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப்படைத் தளத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விமான போர்ப் பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கை விமானப்படையின் பீச்கிராப்ட் விமானம் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பூகோள பாதுகாப்பு ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இந்தியாவினால் இதுவரை நடத்தப்பட்ட மிகப் பெரிய சர்வதேச விமானப் பயிற்சியான 'தரங் சக்தி' பயிற்சியில் இலங்கை விமானப்படை பங்கு பற்றுவதன் மூலம் இலங்கை விமானப்படைக்கு சர்வதேச இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அமைவதுடன், இலங்கை விமானப்படையின் விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களுக்கு இதனூடாக புதிய அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற்றது.

(அ)

# மதுபானசாலைக்கு இருந்த அனுமதியை புதுப்பிப்பதற்காகவே ஆவணம் வழங்கல்!

## அங்கஜன் இராமநாதன் விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 06

"மதுபானச்சாலைகளுக்கான அனுமதியை தனது தந்தை புதிதாக பெறவில்லை எனவும், இருந்த அனுமதியை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கும் முகமாக வழங்கிய ஆவணங்களே அவை எனவும் " பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

மதுபானச்சாலைக்கான அனுமதி விவகாரம் குறித்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனது அப்பா ஒரு தொழிலதிபர். நான் அரசியலுக்கு வர முன்னரே தொழிலதிபராக இருக்கிறார். 70 ஆம் ஆண்டில் இருந்து அவர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

கொழும்பில் 92ஆம் ஆண்டு காலத்தில் மதுபானச்சாலை வைத்திருந்தார். அதன் அடிப்படையில் அவரிடம் சில மதுபானச் சாலைகளின் அனுமதிகள் இருந்தன. அவற்றைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளில் தான் ஈடுபட்டார். புதிதாக அனுமதி பெறவில்லை.




எங்களுக்கு புதிதாக யாரும் தரவேண்டிய தேவை இல்லை. எனது அப்பாவிடம் அனுமதிகள் ஏற்கனவே இருந்தன. அப்பா மீது குற்றம் சாட்டிய நபருக்கும் தெரியும் எனது அப்பாவிடம் மதுபானச்சாலைகளுக்கான அனுமதிகள் இருக்கின்றன என்ற விடயம். தெரிந்தே அவர் குற்றம் சாட்டியுள்ளார்- என்றார்.

(அ)

# மருத்துவர்கள் ஓய்வு வயது மாற்றம் தேர்தல் கால இலஞ்சம் இல்லையா?

## சுகாதார வல்லுநர்கள் சங்கம் கேள்வி

கொழும்பு, செப். 06

சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் அனைத்து வைத்திய அதிகாரிகளின் கட்டாய ஓய்வு வயதை 63 ஆக மாற்றியமைத்து சுகாதார அமைச்சின் செயலாளர் திடீரென சுற்றறிக்கை வெளியிட்டமை தேர்தல் இலஞ்சம் இல்லையா என சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் விசேட வைத்திய அதிகாரிகள், அனைத்து தர வைத்திய அதிகாரிகள், விசேட பல் சத்திர சிகிச்சை நிபுணர்கள், அனைத்து நிர்வாக தர வைத்திய அதிகாரிகள், அரச பதிவு வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு 63 வயதில் கட்டாய ஓய்வு வழங்கப்படவேண்டுமென சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் மருத்துவ நிபுணர்களின் ஓய்வு வயதை 63 ஆக உயர்த்தும் அரசியல் தீர்மானத்தை ஜூலை மாதம் எடுத்ததாகவும், ஆனால் அதற்கான சுற்றறிக்கையை வெளியிடாமல் சுகாதார அமைச்சு அலட்சியம் காட்டி வருவதாகவும், திடீரென கடந்த 02ஆம் திகதி சுற்றறிக்கை வெளியிடப்பட்டதாகவும் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

(அ)

# அரச ஊழியர்களின் உத்தேச சம்பள அதிகரிப்பு; சுற்றறிக்கை 21ஆம் திகதிக்கு முன் வெளியிடுக!

## ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை

கொழும்பு, செப். 06

ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்களின் உத்தேச சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றறிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்-

சுற்றறிக்கையை வெளியிடுவது தேர்தல் சட்டத்தை மீறும் செயல் அல்ல.

எனவே அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியின் உண்மைத் தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் மேடைகளில் கூறுவது உண்மையாக இருக்குமானால், தேர்தல் திகதிக்கு முன்னதாக சுற்றறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

ஏற்கனவே ஓய்வூதியக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே அரச பணியாளர்களுக்கான சுற்றறிக்கையை வெளியிட முடியும். ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளரும் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை இலக்காகக் கொண்டு அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

எனினும் இது தொடர்பான அறிக்கைகளை வெளியிடும் போது ஜனாதிபதி ரணில் கணிசமான இடத்தைப் பெற்றுள்ளார். சம்பள முரண்பாடுகளை நீக்கக் கோரி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கடந்த ஒக்டோபர் 24ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோம்

அதன்போது, அரசாங்கம் தீர்வுகளை வழங்கவில்லை, ஆனால் அவர்களுக்கு எதிராக கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த் தாரை பிரயோகங்களையே அரசாங்கம் நடத்தியது.

எனினும் தற்போது அரசாங்கம் உறுதிமொழிகளை வழங்கியுள்ளது.

இதனை அரசாங்கம் உறுதிப்படுத்தும் வகையில் வழங்க வேண்டும். சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றறிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுங்கள்-என்றார்.

(அ)

# இளம்பெண்ணின் ரிக்ரொக் பார்த்து ஏமாந்த 52 வயது நபர்!

## 47 இலட்சம் ரூபா பறிபோனது; 3 பெண்கள் பொலிஸாரால் கைது

கொழும்பு, செப். 06

இளம் பெண்ணின் ரிக்ரொக் வீடியோக்களைப் பார்த்து ஏமாந்த 52 வயதுடைய ஒருவர் 45 லட்சம் ரூபாவைப் பறிகொடுத்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த மோசடிச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த- தற்போது சுவிஸ் நாட்டில் வசிக்கும் 52 வயதான நபரே இச்சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

இந்தநிலையில் 25 வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் பெயரில் அவருடைய வட்ஸ் அப் கணக்குக்கு ரிக்ரொக் வீடியோக்கள் அனுப்பட்டுள்ளன. அதையடுத்து அவர்கள் இருவரும் தொடர்பாடல்களை ஆரம்பித்துள்ளனர்.

ரிக்ரொக் கணக்கில் பதிவேற்றப்பட்ட படங்களும் சுவிஸில் உள்ளவருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவரும் தனது படங்களைப் பரிமாறிக்கொண்டுள்ளார். இந்தத் தொடர்பாடல் இறுக்கமடைந்த பின்னர், அந்தப் பெண் பல்வேறு தேவைகளைக் கூறி சுவிஸில் உள்ளவரிடம் பணம் பெற்றிருக்கின்றார்.

ரிக்ரொக் கணக்கு உள்ள அதே பெயரைக்கொண்ட வங்கிக் கணக்குக்கே இந்தப் பணப் பறிமாற்றம் நடந்திருக்கின்றது. சுவிஸில் உள்ளவரும் சுமார் 47 லட்சம் ரூபா வரையில் கொடுத்திருக்கின்றார்.

அதன் பின்னர் அந்தப் பெண்ணின் தொடர்பாடல்கள் குறைய ஆரம்பித்துள்ளன. ஒரு கட்டத்தில் சுவிஸில் உள்ளவருக்கு சந்தேகம் ஏற்பட, அவர் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்தது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ரிக்ரொக்கில் உள்ள பெண்ணைக் கண்டுபிடித்து அவரிடம் விசாரணையை முன்னெடுத்தனர்.

விசாரணையில் அவருக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெரியவந்திருக்கின்றது.

அதையடுத்து வங்கிக் கணக்கு இலக்கத்தை வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அரியாலையைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கைது செய்தனர்.

அந்தப் பெண்ணின் பெயரும், முதலெழுத்தும் ரிக்ரொக் கணக்கு வைத்திருக்கும் இளம் பெண்ணின் பெயர் முதலெழுத்தும் ஒன்றாக இருந்தன.

அவரது வங்கிக் கணக்குக்கே பணம் மாற்றப்பட்டுள்ளபோதும், சுவிஸ் நாட்டில் உள்ளவருடன் தொடர்பாடலை மேற்கொண்டவர் அவர் இல்லை என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

தொடர் விசாரணையில் 47 வயதுடைய மற்றொரு பெண் கைது செய்யப்பட்டார். அவரே சுவிஸ் நாட்டில் உள்ளவருடன் இளம் பெண் போன்று உரையாடிப் பணத்தைக் கறந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்தது.

அத்துடன், இவர்களின் 'அன்ரி' என்று அடையாளப்படுத்தப்பட்ட இன்னொருவருக்கும் பணம் அனுப்பப்பட்டுள்ளது. அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட மூன்று பெண்களும் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள்.

ரிக்ரொக் பெண்ணின் பெயரும், தனது நண்பியின் பெயரும் ஒன்றாக இருப்பதைப் பயன்படுத்தி 47 வயதுப் பெண் இந்தத் திட்டத்தைத் தீட்டியுள்ளார்.

சுவிஸ் நாட்டில் உள்ளவர் முன்னொரு தடவை யாழ்ப்பாணம் வந்தபோது, கிடைத்த அறிமுகத்தைக் கொண்டே அந்தப் பெண் திட்டம் தீட்டிப் பணத்தை கறந்துள்ளமையும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, பணத்தை மீள வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். அதையடுத்து அவர்களைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டையில் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் அட்டகாசம்!

## பாலூட்டிக்கொண்டிருந்த தாய் மீதும் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 06

**வட்டுக்கோட்டை கெணவத்தை பகுதியில் நேற்று முன் தினம் இரவு வன்முறை கும்பல் ஒன்று வீடு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது.**

சிறுவர்கள், பெண் உட்பட ஐவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாலூட்டிக் கொண்டிருந்த தாய் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் குறித்த பெண், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வன்முறையில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு கோரி, பிரதேச மக்கள், பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# தேர்தல் விதிகளை மீறிய 22 பேர் கைது!

கொழும்பு, செப். 06

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அக்காலப் பகுதியில் 4 தனியார் வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் தொடர்பில் மொத்தம் 173 முறைப்பாடுகள் இலங்கை பொலிஸாருக்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவை வன்முறைச் செயல்கள் தொடர்பான புகார்கள் மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான புகார்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இதுவரை தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான 119 முறைப்பாடுகளும் வன்முறைச் செயல்கள் தொடர்பான 54 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக தெரிவித்தார்.

# நடைபெறவுள்ள தேர்தலில் நான் நடுநிலை வகிப்பேன்!

## குறிப்பிட்ட தரப்பொன்றுக்கு ஆதரவு வழங்கும் செய்தி பொய் என்கிறார் சந்திரிகா அம்மையார்

கொழும்பு, செப். 06

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தான் நடுநிலை வகிக்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவர் விடுத்த விசேட அறிவிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் குறிப்பிட்ட தரப்பொன்றுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக வெளியான தகவல்களையும் சந்திரிகா மறுத்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் பல வேட்பாளர்கள் தன்னிடம் ஆதரவு கோரிய போதும், அதனை நிராகரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# தேர்தலில் வாக்களிப்பதற்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறை

## நிறுவன அதிகாரிகள் வழங்கவேண்டும்

கொழும்பு, செப். 06

வாக்களிப்பதற்காக, அரச மற்றும் தனியார் துறையினருக்கு விடுமுறை வழங்கவேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு விசேட பூரண சம்பளத்துடன் கூடிய விடுமுறையை உரிய நிறுவன அதிகாரிகள் வழங்க வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பணியிடத்தில் இருந்து வாக்களிக்கும் இடத்திற்குச் செல்லும் தூரம் 40 கிலோ மீற்றர் விடவும் குறைவாக இருப்பின் அரை நாள் விடுமுறையும், 40 இற்கும் 100 கிலோ மீற்றர் இற்கு இடைப்பட்ட தூரம் எனின் ஒரு நாள் விடுமுறையும் 100 இற்கும் 150 கிலோ மீற்றர் இற்கும் இடைப்பட்ட தூரம் எனின் ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரம் எனின் இரண்டு நாட்கள் விடுமுறையும் வழங்கப்படவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# இந்திய துணைத் தூதுவர் சந்திரகுமாருடன் சந்திப்பு



கிளிநொச்சி, செப். 06

யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி, தூதரக சிரேஷ்ட அதிகாரி நாகராஜன் மற்றும் முன்னாள் பாராளுன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான சந்திகுமாருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சிக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்த யாழ் இந்திய துணை தூதரக அதிகாரி குழுவினர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான முருகேசு சந்திரகுமார், அக் கட்சியின் தலைவர் சு. மனோகரன் உள்ளிட்ட குழுவினரை சமத்துவக் கட்சி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

சமகால அரசியல் நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டதாக சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது. (அ)

# லாப் எரிவாயு விலையில் மாற்றமில்லை

கொழும்பு, செப். 06

லாப் சமையல் எரிவாயு விலையில், இந்த மாதம் மாற்றம் மேற்கொள்ளப்பட மாட்டாது என, லாப் சமையல் எரிவாயு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிரோஷன் ஜே பீரிஸ், அறிவித்துள்ளார்.

தற்போது, லாப் சமையல் எரிவாயு, 12.5 கிலோ சிலிண்டர், 3 ஆயிரத்து 680 ரூபாவுக்கும், 5 கிலோ சிலிண்டர், ஆயிரத்து 477 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது என, லாப் சமையல் எரிவாயு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குறிப்பிட்டார்.

இதேவேளை, செப்ரெம்பர் மாதம், லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என, லிட்ரோ நிறுவன தலைவர் முதித பீரிஸ், கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குறைவான தேர்தல் முறைப்பாடு நுவரெலியா மாவட்டத்தில் பதிவு

கொழும்பு, செப். 06

நுவரெலியா மாவட்டத்தில், மிகக் குறைவான தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும், தற்பொழுது அவை தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும், நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக, நுவரெலியா மாவட்டத்தில், 19 ஆயிரத்து 747 தபால் மூல வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வாக்காளர்கள் நேற்று முன் தினம் முதல், நுவரெலியா மாவட்டம் முழுவதும் நிறுவப்பட்டுள்ள இருநூறு வாக்களிப்பு நிலையங்களில், தங்களின் வாக்குகளை பதிவு செய்கின்றனர்.

தபால் மூல வாக்களிப்பு பணிகளுக்காக, 120 அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நியாயமான மற்றும் அமைதியான தேர்தல் நிலைமையை பேணுவதற்கு தேவையான சகல ஏற்பாடுகளும், ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதுடன், தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கை, மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்று வருகின்றது.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள், நுவரெலியாவில் மிகக் குறைவாக பதிவாகியுள்ளது.

நுவரெலியா தேர்தல் முறைப்பாட்டு பிரிவுக்கு, ஏழு முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன.

கடுமையான முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

கிடைக்கப் பெற்ற அனைத்து முறைப்பாடுகளும், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன-என்றார். (அ)

# பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகள் விரைவில்

கொழும்பு, செப். 05

**2023 ஆண்டு உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் எதிர்வரும் 15 நாட்களுக்குள் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவு வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படவுள்ளன.**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போது அந்த நடவடிக்கைகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளதாக ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார். இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்திற்கும் அதிகமாகும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# இரண்டாம் நாளாக நேற்று தபால் மூல வாக்களிப்பு

கொழும்பு, செப். 06

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று இரண்டாம் நாளாக இடம்பெற்றது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு, 7 இலட்சத்து 12 ஆயிரத்து 319 அரச பணியாளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் ஆரம்பமான அஞ்சல் மூல வாக்களிப்பு இன்று வரை நடைபெறவுள்ளது.

அஞ்சல் மூல வாக்களிப்பின் இரண்டாம் நாளான நேற்று முப்படை முகாம்கள் மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களிலும் வாக்குப் பதிவு இடம்பெறவுள்ளது.

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அஞ்சல் மூலம் வாக்களிப்பு நடைபெறும்.

தபால் மூல வாக்குகளைக் குறித்த தினங்களில் செலுத்த முடியாதவர்களுக்கு எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகள் வாக்களிப்பதற்கான மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்பு இடம்பெறும் நிலையங்கள் மற்றும் தபால் மூல வாக்குச்சீட்டுக்களை விநியோகிக்கும் நிலையங்கள் என்பவற்றுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுமந்திரனுக்கு...

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் விசேட அபிவிருத்தி நிதியை பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கியுள்ளார். இதில், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அதிக தொகையாக 10 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு 5 கோடி ரூபாயும் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்கு 2.5 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது.

இதற்கு முன்னதாகவும் சுமந்திரன் எம். பிக்கு அபிவிருத்தி நிதியாக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ் அரசினரும்...

என்று நாமல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

“ரணிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மாகாண சபைத் தேர்தலை நடத்த விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் 13ஆவது திருத்தம் பற்றி அவர்கள் உயர்வாகப் பேசினாலும் அவர்களின் நடவடிக்கைகள் வேறு பட்ட நிகழ்ச்சி நிரலை வெளிப்படுத்து கின்றது.

உண்மையைக் கூறினால் என்னை வில்லன் என்று முத்திரை குத்துகிறார்கள். ஆனால், இப்போது, உண்மையான வில்லன்கள் யார் என்பதை மக்கள் காண முடியும்.

நான் தமிழ் மக்களுக்கு உண்மையை சொல்கிறேன். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் பொய் கூறிகிறார்கள். ரணிலுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மீண்டும் மக்களைத் தோல்வியடையச் செய்துள்ளது. ரணில் மீண்டும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளார்”, என்றும் கூறியுள்ளார். (ஐ)

## ரணில்...

வெற்றிக் கிண்ணத்தை தனது சின்னமாக தெரிவு செய்துள்ளது.

இந்தப் புதிய கூட்டணியின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சியிலிருந்து அவருக்கு ஆதரவளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஈழமக்கள் ஜனநாயக் கட்சி (ஈ. பி. டி. பி.), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தேசிய காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய கட்சி, தேசப்பற்றுள்ள மக்கள் சக்தி ஆகியவை கையொப்பமிட்டுள்ளன. (ஐ)

## தமிழ்...

உறுதியாக உள்ளேன் - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா வாழ் கிளிநொச்சி மக்களை லண்டனில் சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஈழத்தமிழரை மையப்படுத்திய தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இனத்தின் இருப்புக்காகவும் - இறைமைக்காகவும் அரசியல் பணியாற்றவே நான் இணைந்து கொண்டேன். எனது அரசியல் பயணத்தையும் அதுசார்ந்த பணிகளையும் அதே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் - என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## மாற்றத்துக்கு...

ஒன்றுதிரண்டு நிற்கின்றார்கள். ஆகவே, வடக்கு மக்களிடம் கேட்கின்றோம் நீங்களும் மாற்றத்தின் பக்கம் வாருங்கள்.

நாட்டால் அனைத்து மக்களின் ஆதரவுடன் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பு. சஜித் பிரேமதாஸவுக்கு சுமந்திரன் வழங்கிய ஆதரவை நாங்கள் இனவாதமாக நினைக்கமாட்டோம் - என்றார். (ஐ)

## வடக்கின்...

அங்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாகக் கொண்டுள்ளது. இங்குள்ள குளங்கள் புனர்நிர்மானம் செய்யப்படும். வடக்கு மாகாணம் அரசியல்வாதிகளின் உதவிகளோடுதான் விற்பனையாகிறது. இது முழுமையாக நிறுத்தப்படும். நாம் ஆட்சிக்கு வந்தால் மக்களின் வாழ்க்கை செலவை குறுகிய காலத்தில் குறைப்போம். ஏனைய வேட்பாளர்கள் பொய் கூறுவது போல நானும் கூறமுடியும். ஆனால், நான் அவ்வாறு கூற மாட்டேன். செய்வதை மட்டும்தான் சொல்வேன் - என்றார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சியில் சிமெந்து தொழிற்சாலை மற்றும் காற்றாலை மின்சார திட்டம், மன்னாரில் காற்றாலை மின்சார திட்டம், யாழ்ப்பாணத்தில் மூன்று தீவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின்சார திட்டம் என்பன இந்திய முதலீடுகளாகும். இந்த நிலை யில், அநுரகுமார திஸநாயக்காவின் இந்த உரை அதற்கு எதிரானதாக உள்ளதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. (ஐ)

# வெளியான தேர்தல் முடிவுகள் முற்றிலும் பொய்யானவையே!

## 21ஆம் திகதி மாலையே வாக்கு எண்ணும் பணி தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, செப். 05

தபால்மூல வாக்களிப்பு தொடர்பில் சமூக வலைதளங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை. இது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்துள்ளோம். எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 4 மணிக்கு பின்னரே வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலுக்கு உரிய தபால்மூல வாக்களிப்பு நேற்று (நேற்று முன்தினம்) ஆரம்பமானது. 1,500 அதிகமான வாக்களிப்பு மத்திய நிலையங்களில் அரச சேவையாளர்கள் வாக்களித்துள்ளனர். தபால்மூல வாக்களிப்புக்காக வழங்கப்பட்ட மூன்று தினங்கள் நாளையுடன் (இன்றுடன்) நிறைவடையும்.

இந்த மூன்று தினங்களில் வாக்களிக்காதவர்கள் எதிர்வரும் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் தமது சேவை பிரதேசத்தில் உள்ள மாவட்ட தேர்தல்கள் பணிமனையில் வாக்களிக்க முடியும்.

தபால்மூல வாக்களிப்பு மத்திய நிலையங்களில் அமைதியான சூழல் காணப்பட்டது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சட்டவிரோத செயல்பாடுகள் ஏதும் இடம்பெறுமாயின் மாவட்ட தேர்தல்கள் பணிமனையில் முறைப்பாடளிக்கலாம்.

சட்டவிரோதமான முறையில் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுபவர்களால் அவர்கள் ஆதரவளிக்கும் வேட்பாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும். ஆகவே, அனைவரும் பொறுப்புடன் தேர்தல் சட்டத்துக்கு அமைய செயல்பட வேண்டும். தபால்மூல வாக்களிப்பு தொடர்பில் சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் பொய்யானது. எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை வாக்கெடுப்பு நிறைவடைந்து அன்றைய தினம் மாலை 4 மணிக்கு பின்னரே வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

தபால்மூல வாக்களிப்பு தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியாகிள்ள செய்திகள் குறித்து பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடளித்துள்ளோம். தவறான செய்திகள் தொடர்பில் கவனம் செலுத்துவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

## ரணிலின்...

அங்கு பிரதமர் மேலும் கூறியவை வருமாறு,

“இது ஒரு வரலாற்று தருணம். சவால்களுக்கு மத்தியில், நாட்டுக்கு வெற்றியைக் கொண்டு வருவதற்கு நீங்கள் தொடர்ந்து பங்களித்துள்ளீர்கள். மேலும் எதிர்காலத்தை மீண்டும் பாதுகாப்பதில் உறுதியாக உள்ளீர்கள். அரசாங்கங்கள் மற்றும் அரச தலைவர்களை உருவாக்கிய பாரம்பரியத்தில் நாங்கள் பங்காளிகள்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகவும் பொது ஆணையின் மூலம் நியமிக்கப்பட்டு அவர்களின் தலைமையில் பாராளுமன்றில் பெரும்பான்மை பலம் ஏற்படுத்தப்பட்டது.

முற்போக்கு தேசிய இயக்கத்துக்கு இந்நாட்டு மக்கள் வழங்கிய இரும்பு நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில், நாம் அந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது, நெருக்கடியான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் காரணமாக எமது ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினார்கள்.

அந்த அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நமது நாட்டை சமூக உறுதியற்ற நிலைக்கு மாற்றியது. கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, உலகப் பொருளாதாரம் சரிந்தது. இன்றும் அது மீளவில்லை. இதில் எழுந்த பெரும் சவாலுக்கு தலைமை தாங்குவதற்காக 134 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையான வர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தனர்.

சுதந்திர இலங்கையின் தந்தையாகக் கருதப்படும் டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் இருந்து இன்றுவரை கூட்டு அரசாங்கங்கள் இருந்துள்ளன. எனவே, ஒரு பகிரப்பட்ட அரசாங்கம் மற்றும் அரசியல் ஒற்றுமை ஒருமித்த கருத்து மூலம் மட்டுமே அடைய முடியும். ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை நீங்கள் விரும்பியதற்கான இலங்கையை [illegible] மாற்ற நாங்கள் உழைத்து வருகிறோம்.

எதிர்காலத்தில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்பதை நாம் அறிவோம். எனவே, தேசிய மற்றும் முற்போக்கு சக்திகள் கைகோர்க்கும் வகையில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் உருவாக்கத்தை இந்நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக நாம் கருதுகின்றோம்.

நாங்கள் வேறு பாதையில் செல்லவில்லை. இந்த நாடு பயணிக்க வேண்டிய தேசிய மற்றும் முற்போக்கான பயணத்தில் சாமானியர்களுடன் கைகோர்த்து பயணித்துள்ளோம். அதற்கு ஆதரவும் பங்களிப்பும் தேவை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாடு வரலாறு காணாத அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டது. யுத்த காலத்தில்கூட சந்திக்காத அந்த பெரும் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இந்த நாட்டின் ஜனநாயக மக்கள் வாக்குகளில் நம்பிக்கை வைத்து நாம் கைகோர்த்து உருவாக்கிய புதிய பலத்தின் அதே பலத்துடன் இன்று இந்தப் பயணத்தை ஆரம்பிக்கின் றோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒழுக்கத்துடன் பணியாற்றுவதன் மூலம் ஒரு நாட்டை வழிநடத்துவதன் மூலம் உருவாக்கக்கூடிய முடிவு வேகமாக இருப்பதைக் கண்டோம். அராஜகமான, ஆட்சியின்றி இருந்த நாட்டில் ஒழுக்கத்தின் மூலம் பொருளாதார முன்னேற்றம் பிறந்தது. நாம் உருவாக்கிய இந்த முன்னணியின் மூலம் ஒழுக்கமான நாட்டை கட்டியெழுப்ப உறுதியுடன் அர்ப்பணிப்போம். தீர்மானம் மிக முக்கியமானது. விமர்சனங்களுக்கு செவிசாய்ப்போம், உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவோம்.

பாராளுமன்ற ஜனநாயகம் மற்றும் மக்கள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். இங்கே புதிய தலைமுறை நம்மைப் பார்க்கிறது. அந்த வருங்கால சந்ததிக்காக இந்த பயணத்தை மேற்கொள்கிறோம். ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியிலேயே இலங்கை [illegible]காலம் தங்கியுள்ளது.” என்றார்.

## 118 வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது!

சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான 118 வெளி நாட்டு மதுபான போத்தல்களை மறைத்து எடுத்து வந்த வரை கட்டுநாயக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த கைது நடவடிக்கையில் மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தரும் பயணிகள் கொண்டு வரும் மதுபான போத்தல்களை விமான நிலைய வாகன தரிப்பிடத்தில் வைத்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து, பின்னர் அவற்றை பல்வேறு பிரதேசங்களில் உள்ள சுற்றுலா ஹோட்டல்களுக்கு விற்பனை செய்வதாக விசாரணையில் தெரியவந்துள்ளது

## படகு...

தேடிய போதும் அவரை மீட்க முடியவில்லை. இந்த நிலையில், நேற்று வியாழக் கிழமை காலை அவரின் சடலம் கரையொதுங்கியது.

மாதகலை சேர்ந்த 21 வயதான நாகராஜா பகீரதன் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 4 இராஜாங்க...

வகையில் பதவி நீக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பில் 47(3)அ பிரிவில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள தற்துணிவு அதிகாரத்தின் கீழ் இந்தப் பதவிநீக்கங்கள் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அகற்றிய...

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 4 பெண் பணியாளர்களே படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் மாங்குளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபரை சந்தித்தார் மனுஷ நாணயக்கார

## ஆதாரம் இருப்பதாக கூறுகிறார் முஜிபுர்

கொழும்பு, செப். 06

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஐந்து வருடங்களாக வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை சந்திப்பதற்காக முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் அஸ்லம் என்ற நபரும் சென்றுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

அவர்கள் சந்தேக நபரை மற்றொரு நபருக்கு எதிராக வாக்கு மூலம் அளிக்குமாறு வலியுறுத்தியுள்ளதாகவும் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகக் கூறிய முஜிபுர் ரஹ்மான், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இந்த ஆதாரத்தை சமர்ப்பிக்க உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வொன்றிலேயே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினர். (அ)

# தமிழ் பொது வேட்பாளர் குறித்து பேச சாணக்கியனுக்கு அருகதை இல்லை

## வர்ணகுலசிங்கம் குற்றச்சாட்டு

வடமராட்சி, செப். 06

தமிழ் மக்களை முழுமையாக நேசிக்கும் எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று வடமராட்சி வடக்கு கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் முன்னாள் உபதலைவரான நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்ப் பொது வேட்பாளரை சாணக்கியன் தேவையில்லாமல் விமர்சிக்கக்கூடாது. எங்களின் பிரச்னையை தீர்க்காமல் வைத்துக் கொண்டு எம்மை விற்கிறீர்கள். தென்னிலங்கை கட்சிகளோடு சேர்ந்து நின்று கொண்டு தமிழரை பிரித்தாள்கிறீர்கள். ஆனால், காலப்போக்கில் இதற்கெல்லாம் மக்கள் பதில் செல்வார்கள்.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்மக்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு வந்ததுதான் தமிழ் பொது வேட்பாளர். ஆகவே, தமிழ்ப் பொது வேட்பாளரை விமர்சனம் செய்ய உங்களுக்கு எந்த அருகதையும் இல்லை. கடந்த 15 வருடங்களாக தென்னிலங்கை கட்சிகளுக்கு அடிமையாக இருந்ததை தவிர நீங்கள் சாதித்தது என்ன? தமிழ்ப் பொது வேட்பாளரை ஒன்றி ணைந்து நிறுத்திய அரசியல் கட்சிகள் இன்று என்ன செய்கின்றன.

இலங்கையில் இருக்கிற தமிழ் மக்களாக இருக்கலாம், முஸ்லிம்களாக இருக்கலாம் எங்களுக்காக குரல் கொடுக்கும் சிங்கள மக்களாக இருக்கலாம். எல்லோரும் இணைந்து பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் உரிமை கிடைத்து தமிழ் மக்கள் சந்தோசமாக வாழ வேண்டும் என நினைக்கின்ற சிங்கள மக்களும் சங்கு சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு ஆதரவளிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# ஜனாதிபதிக்கு சார்பாக பிரசாரத்தில் ஆளுநர்கள்

கொழும்பு, செப். 06

ஆளுநர்கள் அரசியல் சார்பற்று இயங்கவேண்டு மென்ற சட்ட நிபந்தனைகள் அரசியலமைப்பில் உள்ள போதிலும் பெரும்பாலான ஆளுநர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

பல ஆளுநர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக அரசியல் பிரசாரங்களில் தீவிரமாகப் பங்கேற்பதை அவதானிக்க முடிவதாக தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் கூறுகின்றன.

குறிப்பாக வடமேல் ஆளுநர் நசீர் அஹமட், தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா, மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே, சப்ரகமுவ ஆளுநர் நவீன் திஸாநாயக்க, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் வடமத்திய ஆளுநர் மஹிபால ஹேரத் ஆகியோர் பகிரங்கமாக மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கமைப் பதிலும் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.




# 10ஆம் திகதி மன்னாரில் அமைதி வழிப் பேரணி!

மன்னார், செப். 06

மன்னார் மாவட்டத்தின் வளத்தை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில், எதிர்வரும் 10 ஆம் திகதி, மன்னாரில் அமைதிவழிப் பேரணி ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக, வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில், வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கரும் பங்கேற்றார். (அ)

# நோர்வூட்டில் மாணவர்கள் நான்கு பேரை காணவில்லை

கொழும்பு, செப். 06

நோர்வூட் வென்ஜர் பகுதியைச் சேர்ந்த சென் ஜோன் டில்லரி தமிழ் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர்கள் காணாமல் போயுள்ளதாக நோர்வூட் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காணாமல்போன மாணவியர்களில் தந்தை ஒருவர் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து உள்ளார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எலஹெர சரணாலயத்துக்குள் யானைக்குட்டி சுட்டு கொலை!

கொழும்பு, செப். 06

மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள கிரிந்தலை - எலஹெர சரணாலயத்தில் சுற்றித் திரிந்த யானைக் குட்டி ஒன்று வேட்டைக்காரன் ஒருவனால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக எலஹெர வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

6 அடி உயரமுடைய 6 முதல் 8 வயது மதிக்கத்தக்க யானைக் குட்டி ஒன்றே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளது.

மொரகஹகந்த - களுகங்கை வீதியில் நீர்த்தேக்கத்துக்கு அருகில் உள்ள வீதிக்கு அருகாமையில் இந்த யானைக் குட்டி இறந்து கிடந்துள்ளது.

யானைக்குட்டியின் தலையில் 8 தடவைகள் சுடப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எலஹெர வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கூறினர். (அ)

# பீடி இலைப் பொதிகளுடன் சிலாபத்தில் இருவர் கைது

கொழும்பு, செப். 06

புத்தளம், சிலாபம் கடற்கரை பகுதியில் படகுகள் மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பீடி இலை பொதிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று



முன்தினம் கைது செய்யப்பட்டதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பெரியகுடியிருப்பு மற்றும் சிலாபம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 32 மற்றும் 43 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 02 படகுகள் மற்றும் 1,331 கிலோ 830 கிராம் நிறையுடைய 42 பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org